# பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
இந்துமத அலுவல்கள் அமைச்சு

# பன்முக நோக்கில்
# பதினொராம் திருமுறை


பதிப்பாசிரியர்கள்

கலாநிதி க. இரகுபரன்

கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்



இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

இந்துமத அலுவல்கள் அமைச்சு

நூலின் பெயர் : பன்முக நோக்கில் பதினொராம் திருமுறை

பதிப்பாசிரியர்கள் : கலாநிதி க. இரகுபரன்
கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன்

முதற் பதிப்பு : 2017

வெளியீடு : இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248, 1/1, காலி வீதி, கொழும்பு 4, இலங்கை

அச்சு : குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு 6

விலை : 800/-

Title : Panmuka Nokkil Pathinoram Thirumurai

Editors : Dr. K. Raguparan
Dr. S. Prasanthan

First Edition : 2017

Published by : Dept. of Hindu Religious & Cultural Affairs
248, 1/1, Galle Road, Colombo 4, Sri Lanka

Printed by : Kumaran Press (Pvt) Ltd
39, 36th lane, Colombo 6

ISBN 978-955-9233-45-9

# தலபுராண நோக்கில் பதினொராம் திருமுறை

ச. பத்மநாபன்

ஆன்மாக்களை இறைவன் திருவருளில் ஈடுபடச் செய்யும் பேராற்றல் திருமுறைகளுக்குண்டு. பல்வேறு சந்தங்கள், யாப்பு வகைகள், சிற்றிலக்கிய வடிவங்கள், புராண வரலாறுகள், நுண்கலைக்கூறுகள், சமுதாய மதிப்புகள், அறிவியல் சிந்தனைகள், தலப் பெருமைகள், திருவருட் செயல்கள், இயற்கைக் காட்சிகள், தத்துவ உண்மைகள், ஆன்ம வாழ்வின் அவல நிலைகள், இந்நிலை பற்றிய முறையீடுகள், அவற்றினின்று விடுபடுவதற்கான வழிகள், இறையாண்மை உறவு என்னும் இவைகளின் கருவூலங்களாக திருமுறைப்பாடல்கள் அமைந்துள்ளன. இத்தகைய கருத்துக்களை திருமுறை ஆசிரியர்கள் வெளிப்படுத்துவதற்குரிய மைய விடயங்களாக திருத்தலங்களே அமைந்திருக்கின்றன. இந்த வகையில் 11ம் திருமுறையில் கூறப்பட்டுள்ள சிவத்தலங்களின் பெருமைகள் சிறப்புக் கூறுகள் தல வர்ணனைகள், தலத்துறையும் இறைவன் திருவருட் செயல்கள் என்பன பற்றி இக்கட்டுரை ஆராய முயல்கிறது.

சிவம் என்பது முழுமுதல் வஸ்துவைக் குறித்து நிற்பது. தலம் என்பது இடம், பூமி, உலகம், ஆழம், காடு, வீடு, தலை, நகரம், இலை, இதழ், உடலுறுப்பு (528) எனப் பல பொருள்படினும், சிறப்பாக 'இடம்' என்ற பொருண்மையில் எடுத்தாளப்படுவது குறிக்கத்தக்கது. 'ஸ்த' என்ற சொல் எந்த இடத்திலிருந்து எல்லாப் பொருட்களும் வெளிப்படுத்துகின்றனவோ, எந்த ஒன்று தன்னிடத்திலிருந்து தோன்றிய எல்லாப் பொருட்களையும்

காக்கின்றதோ 'ல' என்ற சொல் எந்த இடத்தில் எல்லாப் பொருட்களும் லயப்படுகின்றனவோ, ஒடுங்குகின்றனவோ அந்த இடம் தலம் ஆகும். (சிவஞானபோதம்-1ம் சூத்திரம்) (வீரசைவம்-ப.189) ஆகவே, தலம் என்பது பரமசிவம் என்ற கடந்த நிலைப் பொருளாகும். மேலும் இன்னது என்று வரையறை செய்ய முடியாத அல்லது செய்து சொல்ல முடியாத நிலையிலுள்ள பொருளைத் தலம் என்று சொல்லும் வழக்கமும் உண்டென்பர்.

இதன் வழி,

சொல்லும் இடமன்று சொல்லப்புகும் இடம்
எல்லை சிவனுக்கு என்று உந்தீபற
என்றால் நாம் என்ன செய்வோம் உந்தீபற

என்ற திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரின் கருத்தியல் சிந்தனை இங்கு ஒப்பிட்டு நோக்கற்குரியது.

ஆகவே, சிவத்தலங்கள் எனப்படுபவை கடந்த நிலைப் பொருளாகிய சிவம் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் இடங்களேயாகும். அதாவது சிவனுக்குரிய வணக்கஸ்தலங்களே/ வழிபாட்டிற்குரிய இடங்களே சிவத்தலங்களென சுட்டப்படுவதனைக் காணலாம். இத்தகு பெருமையுடைத்தவனாகக் காணப்படுகின்ற திருத்தலங்களானவை தமிழர் நாகரிக வளர்ச்சிக்கு நடுவணாக அமைந்திருந்தன என்பதனை திருக்கோயில் கல்வெட்டுக்களும் திருமுறைகளும் மெய்ப்பிக்கப்படுகின்றன.

சமயத்தின் நிறுவனங்களான திருத்தலங்கள் வெறுமனே வழிபாட்டிடங்களாக மட்டுமன்றி சமுதாய மையங்களாகவும் திகழ்ந்தன. எனவே தான் சமூக நலச் சிந்தனைகள் யாவும் திருத்தலங்களை மையப்படுத்தியனவாக அமைந்திருந்தன. வேறுபட்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூக சூழற்புலத் தினின்றும் சைவத்தை மீட்டெழுப்புச் செய்ய முனைப்புடன் செயற்பட்ட பக்தியியக்கத்தினரின் செயற்பாட்டுத் தளமாகவும் திருத்தலங்கள் அமைந்திருந்தன.

துன்பக்கடலாகிய இவ்வுலக வாழ்விலிருந்து மீள்வதற்கு திருத்தலங்களை நோக்கியதாகவே திருமுறைகள் வழிப் படுத்தியிருக்கின்றன. பாசத்தளைகளால் கட்டுண்ட ஆன்மாக்கள் அவற்றில் இருந்து நீங்கி இறைவன் திருவடியைச் சேரப் பெறுவதற்கான நெறிகளையும் அவை கட்டமைத்திருக்கின்றன. (ஷேத்திர வெண்பா) அந்நெறிகளானவை சாதனைக்குரியதும் போதனைக்குரியதுமாகவோ அல்லது சாதனைகளுடன் கூடிய போதனைக்குரியதாகவோ அமையலாம். ஆயினும் அந்நெறி களுக்குரிய பயிற்சிக்களமாக கோயில்களை மையப்படுத்தியுள்ளமை திருமுறைகளுக்குரிய தனிச்சிறப்பாகும். இங்கு,

சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீருமன்றோ

என்ற நாவுக்கரசர் சிந்தனையும்,

செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே

என்ற சிவஞானபோத சிந்தனையும் நினைவிற் கொள்ளத்தக்கன.

சைவத்தின் முதற்பொருளாகிய சிவனின் பெருமைகள், திருவருட் சிறப்புகள் என்பன பல்வேறு நிலைகளில் எடுத்தாளப்பட்டு குறிப்பிடப்பட்ட தலங்களுடன் இணைத்துப் பேசியிருப்பது திருமுறை ஆசிரியர்களின் தனித்துவ உத்தியாகும். இதனை ஆன்மீக வழிகாட்டல் என்றே நினைக்கத் தோன்றுகின்றது.(சம்பந்தர்- திருவெண்காடு) சிவனுக்குரியனவாகவுள்ள திருத்தலங்கள் மட்டுமன்றி சக்தி, கணபதி, முருகன் முதலிய கடவுளர்க்குமுரிய திருத்தலங்களும் திருமுறை ஆசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளனர். 11ம் திருமுறை தவிர்ந்த ஏனைய திருமுறைகளில் கணபதி, முருகன் முதலியோர் சிவனுடன் இணைந்த நிலையில் போற்றப் பட்டுள்ளனர். ஆயினும் ஒன்பதாம் திருமுறையில் திருவிடைக்கழித் திருவிசைப்பாவில் முருகன் தனித்துப் போற்றப்பட்டுள்ளார்.

ஆனால், 11ம் திருமுறையில் கணபதி, முருகன் ஆகிய இரு கடவுளரும் தனித்தனியாக சிறப்பித்துப் போற்றப்படுகின்றனர். திருமுருகாற்றுப்படை, மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை, மூத்த பிள்ளையார் மும்மணிக்கோவை, திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை முதலியநூல்கள் மேற்கூறிய கடவுளிருவரையும் சிறப்பிக்கின்றன.

11ம் திருமுறை ஆசிரியர்களால் பாடப்பட்ட பாடல்களானவை சிறுபிரபந்தங்களாக அமைந்த நூல்களாகக் காணப்படுகின்றன. கோவை, அந்தாதி, உலா, மாலை, ஆற்றுப்படை முதலியன இவ்வகையில் சுட்டித்துக் கூறத்தக்கன.

திருக்கண்ணப்ப தேவர் திருமறம்-(கல்லாடதேவர்)
- (நக்கீரர்)

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி/ திருக்கலம்பகம்/திருவுலா-மாலை/மும்மணிக்கோவை

இப்பிரபந்தங்களானவை ஒரு தலத்தின் மீதுள்ளஇறைவனைக் குறித்துப் பாடப்பட்டவையாகும். அத்தலங்கள் மீது பதிகம் பாடிய நாயன்மார்களின் பதிகத் திறன் குறித்துப் பாடப்பட்டனவாகவும் உள்ளன. தலங்களைக் குறித்துப் பாடப்பெற்றமையால் அவ்வத்தலங்களின் பெயர்களை அப்பிரபந்தங்களை அடையாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக ஷேத்திரவெண்பா 22 தலங்கள்.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்(கா.கா)
திருவாரூர் மும்மணிக்கோவை(சேர)
கோயில் நான்மணிமாலை(பட்)
திருவொற்றியூர் ஒருபா ஒருபது(பட்)
திருவலஞ்சுழி மும்மணிக்கோவை(நக்)
திருக்கைலாய ஞான உலா(சேர)
கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி(நக்)
திருவீங்கோய்மலை எழுபது(நக்)
திருவெழுக்கூற்றிருக்கை (நக்)

திருக்கழுமல மும்மணிக்கோவை(பட்)
திருவிடை மருதூர் மும்மணிக்கோவை(பட்)
திருவேகம்பமுடையார் திருவந்தாதி(பட்)
திருக்கோவிற் திருப்பள்ளியர் விருத்தம்

இதனடிப்படையில் 11ம் திருமுறை ஆசிரியர்களால் எடுத்தாளப் பட்டிருக்கின்ற சிவத்தலங்களை,

1. இத்திருமுறை ஆசிரியர்கள் இறைவனைத் தாமே நேரில் போற்றும் தன்மையில் சென்று பாடிய சிவத்தலங்கள்

2. இறையடியவர்களைப் போற்றும் தன்மையில் அவ்வடிய வர்களால் போற்றப்பட்ட சிவத்தலங்கள்

என்னும் இருநிலையில் நோக்குவது சிறப்பாகும். இரண்டாம் நிலையினைக் காட்டிலும் முதலாம் நிலையிலே பல சிவத்தலங்கள் எழுத்தாளப்பட்டள்ளமை குறிப்பிடத்தக்கது. முற்கூறியபடி இருநிலை நோக்கில் சிவத்தலங்களை இனங்காணக்கூடியதாக இருப்பினும் பொதுவாக 11ம் திருமுறையில் வெளிப்படுத்தப்பட்டி ருக்கின்ற சிவத்தலங்களாக கீழ்வருவனவற்றைச் சுட்டலாம்.

(1) திருவாலவாய்
(2) திருத்தில்லை (ஆகாயம்)
(3) திருக்கயிலை
(4) திருவாலங்காடு
(5) திருவாரூர் (பிருதுவி)
(6) சீர்காழி/திருக்கழுமலம்
(7) திருவிடை மருதூர்
(8) திருவேகம்பம்
(9) திருவொற்றியூர்
(10) திருக்குடந்தைக் கீழ் கோட்டம்
(11) ஐயாறு
(12) திருத்துத்தி (குற்றாலம்)
(13) திருக்கோடிகள்

(14) திருவிடைவாய் (திருவிடைவயல்)
(15) திருநெடுங்களம்
(16) குழித்தண்டலை (குளித்தலை)
(17) திருவானைக்கா (காற்று)
(18) திருமயிலை (கபாலீச்சரம்)
(19) உஞ்சோனை மகாளம்
(20) வளைகுளம்
(21) திருச்சாய்க்காடு
(22) திருப்பாச்சிலாச்சிரமம்
(23) திருச்சிராமாலை
(24) திருமழபாடி
(25) திருவாப்பாடி
(26) திருப்பனந்தாள்
(27) திருமயானம்
(28) திருக்காளத்தி
(29) திருவீங்கோய் மாலை
(30) திருவலஞ்சுழி
(31) ஆவூர்
(32) திருவண்ணாமலை (தீ)
(33) திருவாமாத்தூர்
(34) திருவேங்கடம்
(35) திருக்கூடல்
(36) திருவெண்காடு
(37) திருமறைக்காடு
(38) பூம்புகார்
(39) கானப்பேர்
(40) திருஆக்கூர்
(41) புறந்தை

(42) காரோணம்
(43) திருஆடானை
(44) திருப்பழனம்
(45) திருப்புன்கூர்
(46) திருமண்டளி
(47) திருக்கோகர்ணம்
(48) திருக்கோப்பாடி
(49) திருவனம்
(50) திருவேரகத்தூர்
(51) திருப்புகலூர்
(52) திருக்களந்தை
(53) தாங்கால்
(54) தலையாலங்காடு
(55) திருமாலுமங்கை
(56) செங்குன்றூர்
(57) புலிப்பொது
(58) திருமேற்றளி
(59) அட்டவீரட்டம்
(60) அம்பர்மாகாளம்
(61) ஆலந்துறை
(62) திருக்கடவூர்
(63) கடனாகைக் காரோணம்
(64) காவாத்தலை
(65) திருக்கழிப்பாலை
(66) திருக்காறாயில்
(67) திருக்கானப்பேர்
(68) திருக்கோளிலி
(69) சாயக்காடு

(70) செங்காட்டங்குடி

(71) திருப்பாசூர்

(72) திருப்புகலூர்

(73) திருப்பூவணம்

(74) திருப்பைஞ்ஞீலி

(75) திருமருகல்

என்றவாறு சிவத்தலங்கள் 11ம் திருமுறை ஆசிரியர்களால் எடுத்தாளப்படுகின்றன.

சிவனது இறைமைத் தன்மையும் அவ்விறைவன் கோயில் கொண்டு வீற்றிருந்தருளும் திருப்பதிகளும், இறைவன் அடியார்களின் பொருட்டு செய்தருளிய அருட்செயல்களும், இறைவனை வழிபடும் நெறிமுறைகளும், அவ்வாறான வழிபாடுகளால் இவ்வுலக மக்கள் அடைவதற்குரிய இம்மை, மறுமை இன்பங்களும் திருத்தலங்களை மையப்படுத்தி எடுத்தாளப்பட்டுள்ளன.